புரட்டாதி - ஐப்பசி

புதுமலர்: 16

இதழ்: 05

01.09.2019

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்;**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

# அனல்

ஆசிரியர்:

போதகர் வே.மகாராஜா

## பயம்

## நம்மைப் பாதாளம் கொண்டு செல்லும்




சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# அனல்

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. வாலிபர் வளாகம்
04. பெண்கள் பக்கம்
05. சிறுவர் வட்டம்
06. நற்செய்திப்பகுதி
07. அருட்பணியாளர் சரிதை
08. குறுக்கெழுத்துப்போட்டி - 93
09. அனலின் ஆன்மீக விருந்து
10. பொறாமையின் விளைவு
11. வினா விடை - 95
12. படித்ததில் பிடித்தது

## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.




T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

# அனலின் குரல்

அன்பான வாசக நெஞ்சங்களுக்கு இயேசுவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

**மத்தேயு 25:13 மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.**

புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள் தீவட்டிகளுடன் எண்ணெயையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தீவட்டிகளோடு எண்ணெயைக் கொண்டு வரவில்லை.

தொடர்ந்து எரிவதற்கு எண்ணெ வேண்டும் என்பது சாதாரணமாக எல்லாருக்கும் தெரிந்த உண்மை. ஆசரிப்புக் கூடாரத்தில் குத்து விளக்குத் தொடர்ந்து எரிய வேண்டும் - இது இஸ்ரவேலர்களுக்கு தெரிந்த விடயம். எனவே அறிந்து கொண்ட சத்தியத்தைக் கடைப்பிடித்தால் அவர்கள் புத்தியுள்ளவர்கள் தான், அவர்கள் ஆயத்தமானவர்கள் தான்.

உங்கள் வாழ்வில் தேவனாலே வெளிப்படுத்தப்பட்ட, நீங்கள் அறிந்து கொண்ட சத்தியத்தைக் கொண்டு வாழுங்கள். அத்தோடு ஆவியானவரின் நிறைவில் தங்கியிருங்கள். அப்படியென்றால் நாம் விழித்திருக்கும் நிலையில் இருக்கிறோம். கிறிஸ்துவைச் சுற்றி, அவருடைய வார்த்தையைச் சுற்றி எங்கள் செயற்பாடுகள் இருக்கட்டும். தேவனுடைய வார்த்தையும், அவருடைய ஆவியானவராலும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து அவருடைய வருகையில் அவரோடு கூட செல்லுவோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

– ஆசிரியர் –




வை. விமலதாஸ்

ஒரு ஊரில் கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைகளைச் சேகரித்து விற்பனை செய்யும் மனிதர் ஒருவர் இருந்தார். அவர் குப்பைகளைச் சேகரிப்பதற்காக பிரத்தியேகமான பை *(Bag)* ஒன்றை வைத்திருப்பார். தினமும் காலையில் எழுந்து அந்த பையைக் கொண்டு சென்று அதற்குள் குப்பைகளைச் சேகரித்து தரம் பிரித்து விற்பனை செய்து பணம் சம்பாதிப்பார். இவ்வாறு ஒரு நாள் காலையில் அவர் குப்பைகளைச் சேகரித்து அதனை விற்பனை செய்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொண்டு குப்பைகளைச் சேகரிக்கும் அந்தப் பையுடன் மிகவும் சோகமாக ஓர் இடத்தில் இருந்து தனக்குள் புலம்ப ஆரம்பித்தார். நெடுநேரமாக அவ்விடத்தில் இருந்து தனக்குள் தானே பேசிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்த வீதியால் ஒரு மனிதன் நடந்து வந்து கொண்டிருந்தார். குப்பைகளைச் சேகரிக்கும் இந்த மனிதன் அவ் இடத்தில் நெடுநேரம் நின்று தனக்குள் புலம்பிக்கொண்டிருப்பதைப் பார்த்த அந்த மனிதர் அவரிடம் அருகில் சென்று, ஏன் நீங்கள் இவ்வளவு நேரமாக இவ்விடத்திலிருந்து புலம்பிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு ஏதாவது பிரச்சினையா என்று கேட்டார். அதற்கு குப்பைகளைச் சேகரிக்கும் அந்த மனிதர் சொன்னார்: "ஐயா! பாருங்கள் இந்த உலகத்தில் எனக்கென்று எதுவுமே கிடையாது. எனக்கு சொந்தமாக எந்த சொத்துக்களோ, பணமோ எதுவுமே இல்லை. நான் தினமும் குப்பைகளைச் சேகரிக்கும் அழுக்குப்படிந்து கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கும் இந்த பையை மட்டும் தான் நான் எனது சொத்து என்று சொல்ல முடியும். இதைவிட வேறு எதுவுமே இல்லை. குப்பைகளைச் சேகரிக்கும் இந்த பையைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு எரிச்சலும் கோபமும் தான் வருகிறது. மற்றைய மனிதர்களைப் பாருங்கள்! ஒவ்வொருவரும் எவ்வளவு சொத்துக்களை வைத்திருக்கி

றார்கள். மற்றவர்கள் சொந்தமாக வீடுகள், நிலங்கள், வாகனங்கள், நகைகள், பணம் என எவ்வளவு வைத்திருக்கிறார்கள். எவ்வளவு ஆடம்பரங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் எனக்கென்று இருப்பது குப்பைகளைச் சேகரிக்கும் இந்த பை மட்டும் தான், இதை வைத்துக் கொண்டு தான் நான் எனது வாழ்க்கையை கொண்டு செல்ல வேண்டி இருக்கிறது" என்று சலித்துக் கொண்டார். சலித்துக் கொண்டது மாத்திரமல்ல கோபத்தில் குப்பைகளைச் சேகரிக்கும் அந்த பையை நிலத்தில் போட்டு தன் கால்களால் அதை மிதிக்கத் தொடங்கினார்.

வீதியால் வந்த மனிதர் இதை கொஞ்ச நேரம் அமைதியாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார். பார்த்துக் கொண்டிருந்தவர் குப்பை சேகரிக்கும் மனிதர் அந்த பையை கால்களால் மிதிப்பதை நிறுத்தி அமர்ந்து கொண்டதும் குப்பை சேகரிக்கும் அந்த பையை எடுத்துக் கொண்டு மிக வேகமாக ஓட ஆரம்பித்தார். இதைப் பார்த்த குப்பை சேகரிக்கும் மனிதர் அதிர்ச்சியடைந்து அந்த மனிதனை துரத்த ஆரம்பித்தார். இவரும் துரத்திக் கொண்டிருக்க அவரும் மிக வேகமாக ஓட ஆரம்பித்தார். இவ்வாறு வெகுதூரம் இருவரும் ஓடிக்கொண்டிருக்கும் போது பையை தூக்கிக் கொண்டு ஓடிய மனிதன் அந்த பையை வீதியின் ஓரத்தில் போட்டுவிட்டு அருகில் இருந்த மரத்திற்கு பின் ஒழிந்து கொண்டார். அப்போது துரத்திக் கொண்டு வந்த குப்பை சேகரிக்கும் மனிதன் ஐயோ! எனக்கென்று இருந்த குப்பை சேகரிக்கும் அந்த பையை தூக்கிக்கொண்டு ஓடிவிட்டாரே, என்னிடத்தில் இருந்ததும் போய்விட்டதே என்று அழ ஆரம்பித்தார். மாத்திரமல்ல அந்த இடத்திலே தன்னுடைய பையை அந்த மனிதன் எங்கே வைத்திருப்பார் என்று தேட ஆரம்பித்தார்.

அவர் தேடிக்கொண்டிருந்த போது சற்று தொலைவில் வீதியின் ஓரத்தில் அவருடைய பை இருப்பதைப் பார்த்தார். குப்பை சேகரிக்கும் அந்த மனிதன் அந்த பையை பார்த்தவுடன் மிகவும் சந்தோஷப்பட்டு ஓடிவந்து அந்த பையைத் தூக்கி கட்டியணைத்து என்னுடைய பை எனக்கு கிடைத்துவிட்டது...! என்னுடைய பை எனக்கு கிடைத்துவிட்டது...! என்று கத்த ஆரம்பித்தார். அப்போது பையைத் தூக்கிக் கொண்டு ஓடி மரத்திற்கு பின் ஒழிந்திருந்த மனிதன் வெளியே வந்து குப்பை சேகரிக்கும் மனிதனைப் பார்த்து, "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் வேண்டுமென்று இவ்வாறு நடந்து கொள்ளவில்லை, மாறாக ஒரு காரியத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இப்படி நடந்து கொண்டேன்" என்றார். அப்போது குப்பை சேகரிக்கும் மனிதன் அவரைப் பார்த்து "என்ன காரியத்தை தெரிந்து கொள்வதற்காக இப்படிச் செய்தீர்கள்" என்று கேட்டான். அப்போது அந்த மனிதன் சொன்னார்: "முன்பு குப்பை சேகரிக்கும் அந்த பையை எவ்வளவு நீங்கள் வெறுத்தீர்கள், அதைக் குறித்து புலம்பினீர்கள், கசக்கி அதை காலால் மிதித்தீர்கள். ஆனால் நான் அதைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்த போது நீங்கள் என்னைத் துரத்திக் கொண்டு வந்தீர்கள். மாத்திரமல்ல அந்த பையை நான் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டேன் என்று எவ்வளவு வருத்தப்பட்டீர்கள், வேதனைப்பட்டீர்கள். இப்போது அது கிடைத்தவுடன் எவ்வளவு சந்தோஷப்படுகிறீர்கள், அதைக் கட்டிப்பிடிக்கிறீர்கள். இதற்கு சொற்ப நேரத்திற்கு முன்பு தானே இதை வெறுத்தீர்கள், திட்டினீர்கள். இப்போது பாருங்கள் அதை நீங்களே தேடி ஓடிவந்தீர்கள்" என்று கேட்ட போது தான் குப்பை சேகரிக்கும் மனிதர் உணர்வடைந்தார். அவர்

சொன்னார், "ஆம் நான் தவறு செய்துவிட்டேன், புரிந்து கொள்ளாமல் அந்த பையை காலால் மிதித்து அதை திட்டிக்கொண்டேன். இதைப் பற்றி குறைவாய் காரியங்களைச் சொன்னேன். ஆனால் அந்த பை என்னைவிட்டு போனபிற்பாடு தான் உணர்ந்து கொண்டேன் என்னிடத்தில் இருந்த அந்த ஒரே ஒரு பை தான் நான் தினமும் உழைத்து சம்பாதிக்க எனக்கு உறுதுணையாக இருக்கிறது. அந்த பையில் தான் நான் குப்பைகளை சேகரித்து விற்பனை செய்கிறேன், அதனால் தான் நான் ஏதோ ஒரு வேலையாவது செய்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டேன். எனவே தான் தொடர்ந்து வந்து பையை எடுத்துக் கொண்டேன். இப்போது எனக்கு எவ்வளவு சந்தோஷம்" என்று சொன்னார்.

ஆம் நண்பர்களே! குப்பை சேகரிக்கும் மனிதன் தன்னிடத்தில் இருந்த அந்த பையை எவ்வளவு அதிகமாய் வெறுத்தார். அவர் மற்ற மனிதர்களைப் பார்த்து, அவர்களிடத்தில் இருக்கிற காரியங்கள், அவர்கள் வாழ்கிற வாழ்க்கைகள் என்று மற்றவர்களோடு தன்னை ஒப்பிட்டு தன்னிடத்தில் இருந்ததை வெறுத்து தள்ளினார். தன்னிடத்தில் இருந்த அந்த பையின் மூலம் தான் தன்னுடைய சம்பாத்தியத்தை செய்து கொள்கிறேன் என்பதை புரிந்து கொள்ளாமல் இருந்தார். இதைப் போன்று தான் இன்றைக்கு நாமும் கர்த்தர் நமக்கு கொடுக்கிற காரியங்களை பார்க்காமல் மற்றவர் களிடத்தில் இருக்கிற காரியங்களைப் பார்த்து நம்மிடத்தில் இருக்கிற காரியங்களைக் குறித்து குறை சொல்லி திருப்திப்படாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவன் நம்முடைய வாழ்க்கையில் கொடுத்த காரியங்களின் பெறுமதியை அறிந்து கொள்ளாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு நாளும் நம்மிடத்தில் தேவன் கொடுத்த காரியங்களைக் குறித்து குறை சொல்லாமல் திருப்தியாக வாழ ஆரம்பிப்போம். அப்போது வாழ்க்கை பூந்தோட்டமாக மாறும். **யாக்கோபு 1:4 நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"நான் மூன்றெழுத்துடையோன். உருவில் சிறிதாயினும் உண்மை விளம்பி நான். என்னால் இஸ்ரவேலின் முதல் அரசன் அறியப்பட்டான், என்னால் ஒரு தீர்க்கதரிசி ஆழியின் ஆழத்தைப் பார்த்தான்; குற்றம் செய்த அரசிளங்குமரன் கண்டு பிடிக்கப்பட்டான்; என்னால் புதிய அப்போஸ்தலன் சேர்க்கப்பட்டான். மன்னாதி மன்னனின் உடையின் பங்கீட்டிற்கும் யூதரின் தேச பங்கீட்டிற்கும் நான் பெரிதும் பிரயோஜனப்பட்டேன்" நான் யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2019 ஆடி -ஆவணி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**குடல்** (1இராஜாக்கள் 3:26, யோபு 30:27, சங்கீதம் 38:7, அப்போஸ்தலர் 1:18, ஏசாயா 16:11)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.




☐ போதகர் வை.தேவதாஸ்




அன்பின் தேவனுக்கே மகிமையுண்டாவதாக! அவர் நல்லவராகவே இருக்கிறார். அவரது கிருபையால் தான் நாம் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறோம். **இதுவரைக்கும் எம்மை நடத்திய தேவன் இனிமேலும் எம்மை வழிநடத்துவார்.** ஏனெனில் அவர் சோர்ந்து போகிறவனுக்கு பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிற தேவனாக இருக்கிறார். அவரை நோக்கிப் பார்த்த முகங்கள் ஒரு போதும் வெட்கம் அடைவதே இல்லை.

வாலிபர் வளாகச் செய்திக்குள் செல்வதற்கு முன்பாக உங்களுக்கு ஓர் வாக்குத்தத்தத்தை நினைவூட்ட விரும்புகின்றேன். இவ் வாக்குத்தத்தத்தினை மனப்பாடம் செய்து விசுவாசித்துடன் நீங்கள் அறிக்கையிட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

**பிரசங்கி 2:26 தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்.**

ஆம் பிரியமானவர்களே ஞானம், அறிவு மாத்திரமல்ல; இன்பத்தையும் தேவன் தருகிறார் என்று வேதாகமம் சொல்கிறது. **ஆகவே உங்கள் துன்பங்கள் எல்லாம் இன்பமாக மாறுவதாக! உங்கள் துக்கம் எல்லாம் மகிழ்ச்சியாக மாறுவதாக! உங்கள் பெலவீனங்கள் எல்லாம் பெலமாய் மாறுவதாக!** தேவன் உங்களுக்கு தருவதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்ந்தும் இவ் இதழில் தேவன் உங்களுக்கு வைத்திருக்கும் செய்தியினை தொடர்ந்து படியுங்கள். படிவத்தவைகளை சிந்தித்து உங்கள் வாழ்வுடன் ஒப்பிட்டு சீர்திருத்த வேண்டியவைகளைா சீர் திருத்துங்கள். தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

# தேவ சித்தமில்லாத துவக்கங்கள் வேதனையிலேயே முடிவடையும்

கடந்த சஞ்சிகையில் தனக்கு எது சரியோ அதனையே லோத்து தெரிவு செய்தார் எனவும் அவர் தேவன் தனக்கு தருவதற்கான ஆசீர்வாதத்திற்காக பொறுமையுடன் காத்திருக்கவில்லை எனவும் பார்த்தோம்.

இதுவரைக்கும் ஆபிரகாம் என்னும் மிகப்பெரிய ஆதரவுடன் இணைந்து வாழ்ந்த லோத்து தனித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை வந்த போது தேவனது குரலையோ, தேவ மனிதனாகிய ஆபிரகாமின் ஆலோசனையையோ கேட்காமல் எதற்கும் காத்திருக்காமல் தனது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தார். வேதம் என்ன சொல்கிறது: **பிரசங்கி 7:8 ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது.**

தாங்களே ஆரம்பித்த காரியங்களை முடிக்க முடியாமல் அனேகர் தவிக்கின்றனர். **தொடங்குவது எளிது தான் ஆனால் தொடங்கியதை சிறப்பாக முடிக்க வேண்டுமெனில் அதற்கு பல விலைக்கிரயங்களை செலுத்த வேண்டும்.** அதனைப் போன்று லோத்துவும் தனித்து வாழும் வாழ்க்கை ஆரம்பித்தாலும் அதனை சிறப்பாக செய்து முடிக்க முடியாதவராக காணப்படுகின்றார்.

லோத்துவின் முதலாவது பெலவீனம் **தனக்கு எது சரியோ அதையே செய்பவராக இருந்தார்** என கடந்த இதழில் பார்த்தோம். அவரது அடுத்த பெலவீனம் அல்லது தோல்வியைக் குறித்து இவ் இதழில் பார்ப்போம்.

## 02. தன் துணையை தேவ பயத்தில் நடத்த தவறிவிட்டார்

லோத்துவின் மனைவி தெய்வ பயமற்ற ஓர் ஸ்திரீயாகவே வேதாகமத்தின் பிரகாரம் காணமுடிகிறது. தன் மனைவியின் மீது செல்வாக்கு செலுத்த முடியாத ஓர் கையாலாகாத கணவனாகவே லோத்து அறியப்படுகின்றார். **வாலிபத் துடிப்புடன் இருக்கும் அன்பின் வாலிபர்களே! உங்கள் துணை கர்த்தருக்கு பயந்த, கீழ்ப்படிவுள்ள, அன்பின் மகனாக மகளாக காணப்படுகிறாரா?** என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ஆதியாகமம் 19:1 லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான்.** சோதோமின் வாசலில் லோத்து உட்கார்ந்திருந்ததால் அவர் அந் நகரத்தின் தலைவர்களுள் ஒருவராகவும் அந்த நகரத்தின் நியாயாதிபதிகளில் ஒருவராகவும் செயற்படும் அளவிற்கு வளர்ச்சி கண்டிருந்தார் என்பதை அறியமுடிகிறது.

ஆபிரகாமோடு கூடார வாசியாக இருந்த லோத்து அவரைவிட்டுப் பிரிந்து பட்டண வாசியாக மாறினார். பட்டணத்தில் உயர்ந்த நிலையைப் பெற்றார். இருப்பினும் தனது மானம், மரியாதை அனைத்தையும் இழக்கக்கூடிய நிலைக்குட்பட்டார். **அதற்குப் பல காரணங்கள் இருப்பினும் அவரது உலக சிநேகம் கொண்ட மனைவியும் ஓர் காரணம் என்பதை மறுக்க முடியாது.**

ஆம் பிரியமானவர்களே, **பதவிகள் – பட்டங்கள் உடையவராக நீங்கள் இருந்தாலும் உங்கள் வாழ்க்கைத்துணை தேவனை நேசிக்காதவராக காணப்பட்டால் வெகு சீக்கிரத்தில் நீங்கள் பெற்ற வெற்றிகள் அனைத்தும் இல்பொருளாகிவிடும்.**

ஓர் உண்மைச் சம்பவத்தை கூறவிரும்புகின்றேன்: *தேவ பயமுள்ள ஓர் வேதப்பண்டிதர் ஒருவர் இருந்தார். கலாநிதியாக இருந்த அவர் பெயர்பெற்ற ஓர் வேதாகமக் கல்லூரிக்கு அதிபராகவும் காணப்பட்டார். ஆனால் தேவபயமுள்ள அம் மனிதனின் மனைவியோ அவரது குணங்களுக்கு எதிர்மாறானவளாக இருந்தாள். அது தெரிந்திருந்தும் மாற்றிவிடலாம் என நினைத்து வாழ்வைத் தொடர்ந்தார். அவருக்கு இரு பிள்ளைகள் பிறந்தார்கள். அவளது நச்சரிப்புக்கள் பெருகிக் கொண்டே சென்றது. சகித்து, சகித்து களைத்துப்போன இம் மனிதன் மனைவியின் நடவடிக்கைகளில் அதிர்ப்தியடைந்து குடிக்கு அடிமையானார். இதனை அறிந்த கல்லூரி நிர்வாகம் அதிபர் பதவியில் இருந்து அவரை விலக்கியது. வேதப்பண்டிதராக இருந்தவர் மகாபாரிக் குடிகாரனாக மாறினார். பிள்ளைகளை மணம் முடிக்க வந்தவர்கள் கூட தகப்பனின் குடியைக் காரணம் காண்பித்து அவரது பிள்ளைகளை ஒதுக்கினர். சீரும் சிறப்புமாக இருந்த அவரது கௌரவம் அனைத்தும் வீதிக்கு வந்தது.*

உண்மைதான் நீங்கள் ஓர் ஆணாகவோ அல்லது ஓர் பெண்ணாகவோ இருக்கலாம். **உங்கள் எதிர்காலத்தையே நிர்ணயிக்கப் போகின்ற உங்கள் வாழ்க்கைத் துணையின் தெரிவில் ஓர்போதும் அவசரமோ பிடிவாதமோ காட்டவேண்டாம்.** ஒருவேளை இதனை வாசிக்கின்ற நீங்கள் திருமணமானவராக இருந்தால் தயவு செய்து தெய்வ பயத்துடன் உங்கள் துணைக்கு ஏற்ற துணையாக வாழ முயற்சி செய்யுங்கள்.

ஆபிரகாம் வீட்டிற்குத் தூதர்கள் வருவதை **ஆதியாகமம் 18:1-8**லும் லோத்து வின் வீட்டிற்குத் தூதர்கள் வருவதை **ஆதியாகமம் 19:1-3**லும் வாசிக்கின்றோம். இருவரும் தூதர்களுக்கு சிறப்பான விருந்தைக் கொடுப்பதையும் காண்கின்றோம்.

ஆபிரகாம் வீட்டில் நடந்தது என்ன? **ஆதியாகமம் 18:6 அப்பொழுது ஆபிரகாம் தீவிரமாய்க் கூடாரத்தில் சாராளிடத்திற்குப் போய்: நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு என்றான்.** வந்தவர்களுக்கு

உணவு பரிமாற வேண்டும் என்னும் ஆபிரகாமின் விருப்பத்திற்கு ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் கீழ்ப்படிவதை இங்கு காண்கிறோம்.

ஆனால் லோத்துவின் வீட்டில் என்ன நடைபெற்றது என்பதை இவ் வசனத்தின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். **ஆதியாகமம் 19:3 அவன் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவனிடத்திற்குத் திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு, அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்தார்கள்.** லோத்துவின் வீட்டுச் சமையலில் அவனின் மனைவியைக் குறித்த குறிப்புக்களை காணமுடியவில்லை. லோத்துவை தூதர்கள் சந்தித்த அதிகாரத்திற்கு முந்தைய அதிகாரத்தில்தான் ஆபிரகாமை தூதர்கள் சந்தித்தார்கள். அப்பொழுது அபிரகாமின் வீட்டுச்சமையலில் சாராளின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் லோத்துவின் வீட்டுச் சமையலிலோ அவனது மனைவியைக் குறித்த சிறு குறிப்பைக்கூட காணமுடியவில்லை.

இக் கருத்து உங்களுக்கு வேடிக்கை மிகுந்ததாக காணப்படலாம். ஆனால் திறந்த மனதுடன் ஆழமாக சிந்திப்பீர்களாக இருந்தால் லோத்துவின் மனைவியின் ஒத்துழைப்பின்மையைக் கண்டு கொள்ள முடியும். அன்றாட வாழ்வின் முக்கிய கடமைகளைக் கூட தன் மனைவி அலட்சியம் செய்வதை லோத்து அனுமதித்திருந் தார். ஓர் குடும்பப் பெண்ணாக அவளை லோத்துவால் கீழ்ப்படியப்பண்ண முயடிவில்லை.

அதுமட்டுமல்ல, கர்த்தர் லோத்துவையும் அவன் குடும்பத்தையும் நேசித்து கரம்பிடித்து பாதுகாக்க முன்வந்த போதும் இவரது மனநிலை தூய்மையற்றதாகவே காணப்பட்டது. **ஆதியாகமம் 19:16 அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்.** எவ்வளவு கிருபை லோத்துவின் மனைவிக்கு கிடைத்தது என்பதை எண்ணிப்பாருங்கள். அவள் கரங்களை தேவகரம் பிடித்து வழிநடத்தியது. இதனை வாசிக்கும் சகோதர சகோதரியே! உன் வாழ்வில் இருக்கும் தேவகிருபையை எண்ணிப்பார்ப்பாயா? தேவகரம் பல அழிவுகளில் இருந்து உன்னைப் பாதுகாத்து வந்ததை மறந்து விட்டாயா? இன்று நீங்கள் உயிரோடு இருப்பது அவரது கிருபையே அல்லாமல் வேறொன்றுமில்லை.

**தேவன் லோத்துவின் மனைவியை அழிவில் இருந்து வெளியே கொண்டு வந்துவிட்டதைப் போலவே எத்தனை தடவைகள் தேவன் உங்களைக் காப்பாற்றியிருக்கிறார்.** பல அவமானங்கள், தலைகுனிவுகள் உங்களுக்கு வரவிருந்த போதெல்லாம் தேவ கிருபையாக உங்களை அதிலிருந்து வெளியே கொண்டு வந்ததை ஒரு போதும் மறவாதிருங்கள்.

லோத்துவின் சம்பவத்திற்கு வருவோம். **ஆதியாகமம் 19:26 அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள்.** பாருங்கள் அவளது பரிதாப நிலையை.

கர்த்தரால் கரம்பிடித்து நடத்தப்படும் போது கூட தன் மேல் இருக்கும் தேவ கரத்தின் உன்னத பெறுமதியை உணராமல் தனது ஊரையும், தனது உடைமைகளையும் நேசித்து அவைகளைத் திரும்பிப் பார்த்தாள். விளைவு **"உப்புத்தூணாக மாறினாள்".**

அருமையானவர்களே கர்த்தரோடு செல்லும் நீங்கள் உலகத்தையும் அதன் இச்சைகளையும் உற்று நோக்குவதை விட்டுவிட்டு தேவ பாதுகாப்பிற்குள் ஓடிச் செல்லுங்கள்.

ஏனெனில், **1யோவான் 2:17 உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.** உங்கள் ஆசை, அன்பு, எண்ணங்கள் என்பவற்றைக் குறித்து சிந்திந்துப் பாருங்கள். இந்த வாலிப வயதிலும் எதன்மேல் ஆசை வைத்து எதனைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்? பணம், பொருளை அடைய வேண்டும் என்றே முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்களா? பதவிகளும் பட்டங்களும் தான் வாழ்க்கை என நினைக்கிறீர்களா? கார், வீடு வாசல் தான் சொர்க்கமா? வெளிநாட்டு வாழ்க்கை தான் வாழ்க்கையா? உலகக் காரியங்களை மாத்திரம் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா? வேண்டாம் அருமையானவர்களே, இவைகளிலும் மேலான தேவனது இரக்கங்களையும் கிருபைகளையும் சிந்தியுங்கள். உங்கள் மகிழ்ச்சியான துவக்கங்கள் வேதனையில் முடிவடையலாம்.

பல உயர்வுகளையும், மதிப்புக்களையம் பெற்ற லோத்து தன் துணையை தேவ பயத்துக்குள் நடத்த தவறியமையால் முடிவில் தன் மனைவியை இழந்து தபுதாரன் ஆனான்.

**எபேசியர் 5:21 தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.** ஆமென்.

உங்கள் மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க் கின்றோம். ஜெபத்தேவைகளையும் தெரியப்படுத்துங்கள். கிருபை உங்களோடி ருப்பதாக.

---

பிறரைச் சீர் திருத்தும் கடமையைவிட,
தன்னை சீர்திருத்துவதே முதற்கடமை.



# ஆடம்பரமா! ஆஸ்தியா! அன்பா! எதை நீ தெரிந்து கொள்ளப் போகிறாய்?

❒ திருமதி. J.பிலிப்

ஒரு ஏழைக் குடும்பம் ஒரு கிராமத்தில் வசித்து வந்தார்கள். ஒரு நாள் அதிகாலை வேளையில் அவர்களுடைய வீட்டின் முன் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. வீட்டார் பார்த்த போது மூவர் பெரிய மூட்டையை தம் தம் தலையில் சுமந்தவர்களாக வீட்டின் கதவு அருகில் நின்றார்கள். அப்போ இவர்கள், யார் நீங்கள்? என்று கேட்ட போது நாங்கள் மூவர்! ஆடம்பரம், ஆஸ்தி, அன்பு என்ற பெரிய சுமைகளுடன் நிற்கிறோம். மூவரும் ஒரே தடவையில் உங்கள் வீட்டின் உள்ளே வரமுடியாது. நீங்கள் விரும்பிய யாரைக் கூப்பிடுகிறீர்களோ அவர் மட்டும் உங்கள் வீட்டின் உள்ளே பிரவேசிப்பார் என்றார்கள்.

உடனே மகள் ஓடிவந்து தகப்பனிடம் அப்பா, அம்மா ஆடம்பரத்தை நீங்கள் வீட்டின் உள்ளே கூப்பிடுங்கள், அப்போது தான் நாங்கள் ஆடம்பரமான பொருட்களுடன் ஆடம்பரமான வாழ்வு வாழலாம். இக் காலத்தில் ஆடம்பரத்திற்கு தான் முதலிடம். ஆடம்பரமாக நாம் இருந்தால தான் நம் சமுதாயத்தில் மதிப்பாக வாழலாம் என்றாள்.




இதைக் கேட்ட தகப்பனார் வேண்டாம் மகளே, நாம் ஆஸ்தியை கூப்பிட்டால் நல்ல ஆஸ்தி உடையவர்களாக சமுதாயத்தில் வாழலாம். நல்ல மாடிவீடு, கார், நகைகள், பணம் போன்றவை எம்மிடம் இருந்தால் உனக்கு நல்ல பெரிய உத்தியோக மாப்பிள்ளையாய் பார்த்து திருமணத்தை முடித்துவிடலாம். அப்போது என்னுடைய பெரிய பொறுப்பு முடிந்துவிடும் என்றார்.

*தகப்பனின் கருத்துக்களை கேட்ட தாயார் கூறினார், ஆடம்பரமும் வேண்டாம், ஆஸ்தியும் வேண்டாம் அன்பை வீட்டிற்குள் அழையுங்கள். அன்பே எல்லாவற்றிலும் மேலானது என்றாள் அத் தாயார்.*

இதை வாசிக்கும் அருமையான சகோதரியே இப்படியான ஒரு சந்தர்ப்பம் உன் வீட்டில் ஏற்பட்டால் நீ எதை தெரிவு செய்வாய்?. மகளைப் போல ஆடம்பரத்தை விரும்புவாயா? அல்லது வீட்டின் தகப்பனைப் போல ஆஸ்தியை விரும்புவாயா? மகளைப் போன்று ஆடம்பரத்தை விரும்பினால் உன் வீடு ஆடம்பரமான ஆடைகள், ஆடம்பரமான பொருட்கள் நிரம்பினதாய் காணப்படும். அல்லது வீட்டின் தகப்பனைப் போல ஆஸ்தியை விரும்பினால் உனக்கு நல்ல மாடி வீடுகள், கார்கள், நகைகள் இன்னும் ஏராளமான பணம் உன் வீட்டை நிரப்பும். அல்லது அவ் வீட்டின் தாயைப் போல உனது வீட்டிற்குள் அன்பை தெரிந்து அழைப்பாயா?

**வெளிப்படுத்தல் 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். "உன்னைத் தேடி வந்த அன்பான இயேசு உன் இதயக் கதவைத் தட்டுகிறார். அவருடைய தட்டுதலின் சத்தத்திற்கு நீ செவி கொடுப்பாயா?"** இது எப்படியாகும் என்று சிந்திக்கிறாயா? லீதியாளின் இருதயத்தை திறந்த தேவன் உன்னுடைய இருதயத்தையும் திறக்க ஆயத்தமாய் இருக்கிறார். லீதியாளின் இருதயம் எங்கே திறக்கப்பட்டது? எப்படி திறக்கப்பட்டது?

லீதியாள் ஜெபக்கூட்டத்தில் இருந்தாள். அவள் பவுல் கூறியவற்றைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். தேவ வார்த்தை அவளுடைய இருதயத்தை தட்டிய போது பாவ உணர்வடைந்து தன் இருதயத்தை திறந்து இயேசு கிறிஸ்துவை தன் **இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். லீதியாள் ஒரு வியாபாரியாக இருந்த போதும் ஆடம்பரம், ஆஸ்தி என்பவற்றுக்கு அவளுடைய இருதயத்தில் இடம் கொடுக்காதபடி தேவ வார்த்தையாகிய அன்புக்கு இடங்கொடுத்தாள். அதனால் அவளுடைய வீட்டாரும் தேவ அன்பைக் கண்டு கொண்டார்கள்.**

சகோதரியே, உன் இருதயக் கதவை தேவ அன்பிற்காய் திறப்பாயாக. இன்னும் உன்னுடைய இருதயத்தை ஆடம்பரம், ஆஸ்திகளினால் நிறைத்திருக்கிறாயா? தேவனுடைய தட்டுதலின் சத்தம் இன்னும் உனக்கு கேட்கவில்லையா? சத்தம் கேட்கவேண்டுமானால் லீதியாள் போல ஜெபிக்கிற கூட்டத்தில் நீ இருந்து தேவ வார்த்தையைக் கவனமாய் கேட்டால் உன் இருதயம் தேவ அன்பால் நிறையப்பட்டு அவ் அன்பு உன் வீட்டார் அனைவரையும் நிரப்பும். ஏனெனில் எல்லாம் ஒரு நாள் ஒழிந்து போகும்.

**1கொரிந்தியர் 13:8a**
**அன்பு ஒருக்காலும் ஒழியாது.**





# மறைக்கப்பட்ட பாடம்

❑ ஜசிந்தா அக்கா




**ஜோ**னி தன் பெற்றோரை அதிகமாய் நேசித்தான். தன் பெற்றோருக்கு அவன் ஒரே பிள்ளையாயிருந்தாலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பான். எட்டு வயது சிறுவனாக இருந்தாலும் சோம்பல் அவனிடத்தில் காணப்படாததொன்றாக இருந்தது. இரவு நித்திரைக்குச் செல்லும் போது தனது தாய் ஜெனியிடம் "என்னைக் காலை 5மணிக்கு எழுப்பிவிடுங்கள் அம்மா" என்று கூறிவிட்டு நித்திரைக்குச் செல்வான். ஜொனி காலையில் விழிப்பதற்கு அவன் அம்மா ஜெனியே 'அலாரமாக' இருந்தாள்.

அவ்வாறே அவனை 'அலாரம்' எழுப்பிற்று. உடனடியாகவே எழுந்து தன்னை சுத்திகரித்துக் கொண்டு இயேசப்பாவை துதித்து மகிமைப்படுத்தி அவருடன் பேசினான். பின்பு இயேசப்பா தன்னோடு என்ன பேசுகிறார் என்று வேதாகமத்தைத் திறந்து வாசித்தான். **"உன்னிடத்தில் ஒரு குறை உண்டு"** என்று இயேசப்பா பேசினார். அப்படி என்ன குறைவாயிருக்கும் என்று யோசித்து, வேதாகமத்தை மூடி வைத்துவிட்டு தனது தாய்க்கு உதவிகள் செய்துவிட்டுப் பாடசாலைக்குச் சென்றான்.

அப்பா ஜோன் தன் மகன் ஜொனியை அதிகமாய் நேசித்தார். அவனுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய கலைகள் எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்தார். ஜொனியும் சந்தோஷத்துடனும் ஆர்வத்துடனும் கற்றுக்கொண்டான். அவன் பாடசாலை முடித்து வந்ததும் தனது தகப்பனாரின் தோட்டத்திற்குச் சென்று பல உதவிகளைச் செய்து கொடுப்பான். பண்படுத்தப்பட்ட தோட்டத்தில் விதைகள் நடுவதற்கு கற்றுக்கொண்ட ஜொனியிடத்தில் தகப்பனார் சில விதைகளைக் கொடுத்து "சிறு குழிகள் தோண்டி அதற்குள் ஒவ்வொன்றாகப் போட்டு இலேசாக மண்ணினால் மூடு" என்று சொல்லிக்கொடுத்தார். அவன் மிகவும் சந்தோஷத்துடன் அப்பா கற்றுக்கொடுத்த

மாதிரியே சுறுசுறுப்பாக விதைகளை நட்டுக்கொண்டிருந்தான். மேலும் சில விதைகளை அவன் கையில் கொடுத்துவிட்டு கவனமாகச் செய் என்று சொல்லி தகப்பனார் வீடு சென்றார். தனது கையில் கிடைத்த பொறுப்பை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைந்தான்.

ஜொனி பொறுமையோடு ஒவ்வொரு குழியிலும் ஒவ்வொரு விதைகளாகப் போட்டு மணலால் மூடிக்கொண்டிருந்தான். அவ்வேளையில் அவனது நண்பன் நிஷான் அங்கு வந்தான். "ஜொனி என்ன செய்கிறாய்?" என்றான். "விதைகள் நடும் வேலையை அப்பா என்னிடம் பொறுப்புத் தந்துவிட்டுப் போய்விட்டார், இதை நான் செய்து கொண்டிருக்கிறேன்" என்றான் ஜொனி. "இந்த வேலை அதிக நேரம் எடுக்கும், நான் மீன்பிடிக்கப்போகிறேன்" என்று ஆசைகாட்டினான். "நானும் உன்னோடு வரலாம், ஆனால் அப்பா இதைச் செய்யச் சொல்லி இருக்கிறார்" என்றான் ஜொனி. "சரி... நீ ஒன்று செய்யலாம் மிகுதியாக இருக்கிற எல்லா விதைகளையும் ஒரு பெரிய குழியில் போட்டு மூடிவிடு, அது வளர்ந்து அடர்த்தியாக நிற்கும், பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும்" என்றான் நண்பன் நிஷான்.

அழகும் ஆசையும் ஜொனியை ஆண்டு கொண்டது. நண்பன் சொன்ன படியே ஒரு பெரிய குழி தோண்டி மிகுதியான எல்லா விதைகளையும் போட்டு மூடிவிட்டான். இருவரும் சந்தோஷமாக மீன்பிடிக்கச் சென்றார்கள்.

மாலை மயங்கும் வேளையில் ஜொனி வீடு திரும்பினான். அப்பாவிடம் சென்று "நீங்கள் கொடுத்த வேலையை முடித்துவிட்டேன்" என்றான். "நன்றி மகனே, மழை பெய்த பின் நல்ல பீன்ஸ் அறுவடை கிடைக்கும்" என்றார் அப்பா.

மழை பெய்ய ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் அப்பாவும் மகனும் தோட்டத்திற்குச் சென்று வருவார்கள். ஒரு நாள் திடீரென்று ஜொனி துள்ளிக் குதித்து கரங்களைத் தட்டி உற்சாகமாக சத்தம் போட்டான். "அப்பா, அப்பா பீன்ஸ் முளைக்கத் தொடங்கிவிட்டது, ஓடிவந்து பாருங்கள்" அப்பா ஜோனும் ஓடிவந்தார். "ஒன்று.... இரண்டு..... மூன்று.... நான்கு.... அது.... என்ன... ஒரு கும்பல்... முளைகள்! இது என்ன மகனே?" ஜொனியின் முகத்தை அப்பா நோக்கினார். ஜொனி வெட்கத்தால் தலை குனிந்தான். தன் குற்றத்தையும் மீன் பிடிக்கச் சென்றதையும் தகப்பனிடம் சொல்ல வேண்டியதாயிற்று என்றும், வேதம் வாசிக்கும் போது **"உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு"** என்று இயேசப்பா பேசியதை அலட்சியம் பண்ணியதையும் நினைத்து மனங்கசந்து அழுதான். இயேசுவிடமும் அப்பாவிடமும் மன்னிப்புக் கேட்டு மனந்திரும்பினான். இனி பாவத்தை ஒரு நாளும் மறைக்கமாட்டேன் என்று தீர்மானித்தான்.

இயேசப்பாவின் அன்பான செல்லப்பிள்ளைகளே! நீங்கள் தவறுகளை மறைக்காமல் இயேசப்பாவிற்கு அறிக்கை செய்துவிடுங்கள். அவர் தமது இரத்தத்தினால் உங்களைக் கழுவி சுத்தம் செய்வார். தவறுகளை மறைத்தால் அது உங்களை வெட்கப்படுத்தும். யாருக்கு விரோதமாய் தவறு செய்தீர்களோ அந்த நபரிடமிருந்து மன்னிப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசப்பா உங்களை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறார். **சங்கீதம் 51:2b என் பாவமற என்னைச் சுத்திகரியும்.**




பர்னபா




**கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார் - சங்கீதம் 40:17**

நன்மைகள் செய்தும் மறக்கப்பட்டுப் போகும் உலகத்திலே நாம் வாழ்கின்றோம். **1சாமுவேல் 16:11 உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன்: இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான் என்றான்; அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி: ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன் என்றான்.**

வீட்டில் உள்ளவர்களுக்கு வருமானத்தைத் தேடிக்கொடுத்தவன், குடும்பத்தின் ஜீவியத்திற்காக தன்னை தியாகம் செய்தவன். வீட்டில் விருந்து நடைபெறும் போது மறக்கப்பட்டுப்போய், அதிலும் சாமுவேல் தீர்க்கதரிசி இவ்வளவு பேர் தான் உன் பிள்ளைகளா? என்று ஈசாயைக் கேட்கும் வரைக்கும் நினைவு கூரப்படாமல் இருந்த மனிதன். **மனிதரால் நினைக்கப்படாதவன் தேவனால் நினைக்கப்பட்டு அழைக்கப்பட்டான்! அபிஷேகிக்கப்பட்டான்! அமர்த்தப்பட்டான் எதிர்கால அரசனாக!**

நம்முடைய வாழ்க்கையிலும் நாம் மற்றவர்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருப்போம். சிலவேளை மறைவில் தியாகங்கள் கூட செய்திருப்போம். அன்பான சகோதரனே, சகோதரியே சிலவேளை அவைகள் மற்றவர்களால் மறக்கப்பட்டு நினைக்கப்படாமல் போகலாம். பதில் நன்மையை அல்லது நன்றியைக்கூட காணமுடியாமல் இருக்கலாம். **நொந்து போகவேண்டாம் தேவனோ உங்கள் மேல் தான் நினைவாக இருக்கிறார்.**

**ஆதியாகமம் 40:23 ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன்**

**யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்.** அன்பான தேவ பிள்ளைகளே யோசேப்பு என்ற வாலிபன் வெளி உலகத் தொடர்புகள் இல்லாமல் சிறையில் இருந்து, விடுதலை பெற்றுக் கொடுப்பதற்கு யாரும் அற்றவனாக இருந்த இக்கட்டான சூழ்நிலையில் ஒரு மனிதனுக்கு உதவி செய்கின்றான். அவன்தான் எகிப்து ராஜாவின் பானபாத்திரக்காரன். இந்த பானபாத்திரக்காரன் கண்ட சொப்பனத்திற்குரிய அர்த்தத்தை சரியாக சொன்ன யோசேப்பு **ஆதியாகமம் 40:14 இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும்.** என்று கூறினான். ஆனால் நன்மையைப் பெற்று ஆசீர்வாதத்தை அனுபவித்துக் கொண்டிருந்த பானபாத்திரக்காரன் **யோசேப்பை நினைக்காமல் அவனை மறந்துபோய் விட்டான்.**

**ஆம் பிரியமானவர்களே நீங்களும் யோசேப்பை போன்று மறக்கப்பட்டுப்போயிருக்கின்றீர்களா?** உங்களிடம் ஒன்றும் இல்லாததினாலே நீங்கள் மற்றவர்களுடைய வெளிப்பார்வைக்கு உங்களிடம் கவர்ச்சிகரமானவைகள், உயர்வானவைகள், மேன்மையானவைகள் இல்லாததால் உங்களுடைய சிறிய நன்மைகளை உங்கள் தோற்றத்தினாலே இருக்கும் இடத்தினாலோ அல்லது ஸ்தானத்தினாலோ நினைக்கப்படாமல் போகலாம். **பயப்படாதிருங்கள்! மறக்கப்பட்டு மனிதர்களால் நினைக்கப்படாமல் இருந்த அந்த யோசேப்பை தான் தேவன் நினைவு கூர்ந்து. ஆதியாகமம் 41:8-9 (8.) காலமே பார்வோனுடைய மனம் கலக்கங்கொண்டிருந்தது; அப்பொழுது அவன் எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும் சகல சாஸ்திரிகளையும் அழைப்பித்து, அவர்களுக்குத் தன் சொப்பனத்தைச் சொன்னான்; ஒருவராலும் அதின் அர்த்தத்தைப் பார்வோனுக்குச் சொல்லக்கூடாமற்போயிற்று. 9. அப்பொழுது பானபத்திரக்காரரின் தலைவன் பார்வோனை நோக்கி: நான் செய்த குற்றம் இன்றுதான் என் நினைவில் வந்தது. எகிப்துக்கு அதிபதியாகவும், பார்வோனுக்கு தகப்பனாகவும் மாற்றினார்.**

**பந்திக்கு நினைக்கப்படாதவனாகிய தாவீதைத் தான் தேவன் அனேகரை போஷிப்பதற்கும் தேசத்தை விசாரித்து நடத்துவதற்கும் தலைவனாகவும் ராஜாவாகவும் ஏற்படுத்தினார்.**

எனவே அன்பான சகோதரனே! சகோதரியே! பெற்றோர்களே! சிலவேளை உங்களை உங்கள் பிள்ளைகள் கூட மறந்திருக்கலாம். பிள்ளையைப் போன்று நீங்கள் தூக்கி வளர்த்தவர்கள் மறந்து போயிருக்கலாம். கலங்கவேண்டாம்! கர்த்தர் உங்களை மறக்கவில்லை. அவர் உங்கள் மேல் நினைவாகவே இருக்கிறார்.

**ஏசாயா 49:16 இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 92
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. தெலாயிமில் (Iசாமு 15:4)
04. சோவான் (சங்கீதம் 78:43)
05. ஒபதியா (Iஇரா 18:7)
07. தாவீது (சங்கீதம் 25:5)
11. போவாஸ் (மத்தேயு 1:5)

**வலமிருந்து இடமாக**

02. துரோவா (அப்போஸ்தலர் 16:8)
04. சோகெலெத் (Iஇரா 1:9)
08. நெபாயோத் (Iநாளா 1:29)
10. தேராகு (ஆதி 11:26)
14. கிபியா (ஏசாயா 10:29)
16. அத்தாலியாள் (IIஇரா 11:1)

**மேலிருந்து கீழாக**

02. துன்மார்க்கர் (ஏசாயா 57:20)
03. வாஞ்சை (நீதிமொழிகள் 13:19)
06. எசேக்கியா (ஏசாயா 38:9-14)
09. சிதேக்கியா (IIநாளா 18:23)

**கீழிருந்து மேலாக**

12. அத்திமரம் (நியாயாதி 9:11)
13. ஆசையே (நீதிமொழிகள் 19:22)
15. மேவிபோசேத் (IIசாமு 21:7)



# வினாவிடை – 94
## சரியான பதில்கள்

01. யாத்திராகமம் 20:11
02. ஏழாம் மாதம் பத்தாம் திகதி (லேவியராகமம் 16:29,31)
03. ஓசியா (ஓசியா 9:8)
04. எத்தியோப்பியன் தன் தோலை மாற்றக்கூடுமானால் (எரேமியா 13:23)
05. பவுல் (ரோமர் 12:9)
06. ஏசாயா (ஏசாயா 21:5)
07. ஏசாயா 50:9
08. யாத்திராகமம் 31:17
09. யாக்கோபு (ஆதியாகமம் 31:54)
10. அமாசாய் (Iநாளாகமம் 12:18)




ஞா.சாமுவேல்

-



# என் மீட்பர் உயிரோடிருக்கையிலே...

மாலை நேரம். கதிரவனின் ஒளி மங்கி மறைந்து கொண்டிருந்தது. பாதை வழியே நடந்து கொண்டிருந்த போதகர் கண்ணில்பட்டது ஒரு சிறு காகிதத்துண்டு. அதை எடுத்து அவர் கண்ணுக்கு அருகில் வைத்துக் கொண்டு படித்தார். அதில் ஒரு வசனம்:

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார்" யோபு 19:25 என்பது தான் அந்த வசனம். மனச்சோர்வோடு வீடு நோக்கி நடந்து கொண்டிருந்த அந்தப் போதகருக்கு அவ்வசனம் புத்துணர்வையும், புது உற்சாகத்தையும், புதுமையான சிந்தனையையும் கொடுத்து, அடுக்கடுக்காகத் தமக்கு வந்து கொண்டிருந்த துன்பங்களைக் கண்டு பரிதவிக்கவோ, பாரங்களைப் பகிர்ந்து கொள்ளவோ எவருமே இல்லையா? என் ஆண்டவரும் கூட என்னிடம் பேசாமல் இருக்கின்றாரே? என்று புலம்பிக் கொண்டிருந்த அவருக்கு இந்த வசனம் ஆண்டவர் உற்ற துணை என்பதையும், கைவிடாத மீட்பர் என்பதையும், உயிரோடிருக்கிறார் என்ற உண்மையையும் உணர்த்திக் காட்டியது. அவர் உள்ளத்திலிருந்து பாடல் வரிகள் பீறிட்டு வெளிவந்தன.

"என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்கென்ன குறையுண்டு நீ சொல் மனமே. கவலைகள் தீர்ப்பார். கண்ணீர் துடைப்பார். கடைசிமட்டும் கைவிடா

திருப்பார்" கருத்தாழம் மிக்க இப்பாடல் வரிகள், துன்பமும், துக்கமும் சோர்வும் நம்மைச் சூழ்ந்திடும் போது, நமக்கு ஆறுதலும், ஊக்கமும் தந்திடும் அரும் மருந்தாக காணப்படுகின்றது. இவர் தரங்கம்பாடி, பெங்களூர் ஆகிய இடங்களில் இறையியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர். பல மாணவர்களுக்கு முறைப்படி தமிழ் கற்பித்தவர். இசையில் ஆர்வம் உடையவர். கவிதைகளும், பாடல்களும் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தவர். இப் போதகரின் சாகாவரம் பெற்ற "குணப்படு பாவி" என்ற பாடலும், பிறரை பாவங்களிலிருந்து விலக்கி கிறிஸ்துவண்டை ஈர்ப்பதாக காணப்படுகின்றது. இயேசு கிறிஸ்துவையே தன் வாழ்நாளில் உறுதியாக பற்றிக் கொண்ட இவர், அழகு தமிழில் ஆண்டவரைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் ஏராளம். திருச்சபைகளில் இப் பாடல்களால், கிறிஸ்துவண்டை வந்தவர்களும் எண்ணற்றவராவர். ஆண்டவரின் ஐந்து காயங்களே அடியேனின் அடைக்கலம் என்று கூறிய இவர் நெடுங்காலம் வாழ்ந்து மரணத்தை ஆதாயமாக ஏற்றுக்கொண்டார்.

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இயேசுவே! செங்கரும்பே! உனை எத்தனை நாவினால் இத்தினம் போற்றுவேன் — ஞா.சாமுவேல்**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்டு 22

---

# மெல் டிராட்டர்

## 1870 - 1940



## மீண்டும் உயிர் பெறுவோம்

இரண்டு வீரர்கள் வேட்டைக்குப் போனார் கள். ஒரு குருவிக் கூட்டைப் பார்த்தார்கள். கூட்டுக் குள் கையைவிட்ட ஒருவன் மூடியபடி கையை வெளியே எடுத்தான்.

"என் கைக்குள் ஒரு குருவி இருக்கிறது. அது உயிரோடு இருக்கிறதா? செத்திருக்கிறதா?" என்று அடுத்தவனைக் கேட்டான்.

அவன் சற்று யோசித்தான். அக்குருவி உயிரோடு இருக்கிறது என்று சொன்னால் அவன் வேண்டுமென்றே கொன்று விடுவான் என்று எண்ணிய இவன், "அது உயிரோடு இருப்பதும், இறந்து போவதும் உன் கையில் தான் இருக்கிறது" என்று பதிலளித்தான். குருவி உயிர் தப்பி பிழைத்தது. பறந்து சென்றது.

இயேசு கிறிஸ்து இல்லாத வாழ்க்கை உயிரற்ற வாழ்க்கை போன்றதே. இவ்வுலகில் நம் வாழ்க்கையை உயிரோடு அமைத்துக் கொள்வதும், நடைப்பிணங்களாய் மாற்றிக் கொள்வதும் நம் கைகளில் தான் உள்ளது.

1870 ஆம் ஆண்டு பிறந்த மெல் டிராட்டர் தன் குடிகார தகப்பனால், குடிகாரனாகவே வளர்க்கப்பட்டார். வாழ்க்கையில் திட்டம் ஏதுமின்றி, ஏனோதானோவென்று வாழ்க்கையை நடத்திய இவர், 1897ஆம் ஆண்டு தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்துடன், கடைசியாக குடித்து வெறித்து செத்துவிடலாம் என எண்ணி, ஓர் இடத்தில் அமர்ந்தார். அப்பொழுது ஒரு இறை மனிதன் டாம் மெக்கே என்பவரின் அழைப்பை ஏற்று, அருகில் நடைபெற்ற நற்செய்திக் கூட்டத்திற்குச் சென்றார்.

இயேசு கிறிஸ்து உன்னை நேசிக்கிறார், அவருக்கு உன் உள்ளத்தில் இடம் தருவாயா? பிரசங்கியாரின் இக் கேள்வி இவர் உள்ளத்தில் ஈட்டி போன்று பாய்ந்தது. கிறிஸ்துவுக்கு தன் உள்ளத்தை ஒப்புக்கொடுத்தார். அன்றிலிருந்து குடிப்பழக்கத்தை விட்டுவிட்டதோடு, சமூதாயத்தில் குடித்து வெறித்து அலைபவர்களுக்கு சீர்திருத்தும் மையங்களை ஏற்படுத்தினார். 1905ஆம் ஆண்டு, இவர் பார்வையில் 68 மையங்கள் செயல்பட்டன. 20 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் மாபெரும் ஊழியராக அநேகரை கிறிஸ்துவில் உயிரடையச் செய்தார்.

**அன்பரே! உங்கள் வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் உயிர்பெற்றுக் காணப்படுகிறதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் — பவுல்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" அக்டோபர் 05**

---

**2019**

**சரியான விடை எழுதியவர்களில்**
**பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**



**வினாவிடை - 24**
க.கிறேஸ் கெற்சியாள்
பள்ளிக்குடா

**குறுக்கெழுத்துப் போட்டி - 22**
எஸ்.லக்சாயினி
நாவற்குழி

# குறுக்கெழுத்துப் போட்டி 93

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | 02 | 03 |
| | | | 04 | | | | | |
| | | | | | | | 05 | |
| | | | 06 | | | | | |
| | | | | | | | 07 | |
| | 10 | | | 09 | | 08 | | |
| | | | | | 11 | | | |
| 14 | | 13 | | | | | 12 | |
| 15 | | | | | | | 16 | 17 |

**இடமிருந்து வலமாக**

04. ஜன்னலிலிருந்து கீழே தள்ளப்பட்டவள்
06. தாவீது வாசம் பண்ணின நகரம்
08. சமாரியாவுக்கு எதிராக கர்த்தருடைய வார்த்தையைக் கூறின தீர்க்கதரிசி
11. "அவரே என் இரட்சிப்பு" என்றவர்
14. பார்வோனின் மனைவி
15. ஓர் என்னும் மலை உச்சியில் இவன் மரித்தான்

---

**வலமிருந்து இடமாக**

02. "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்று இவனிடம் தூதன் கூறினான்
05. எலியேசரின் குமாரரில் தலைமையாயிருந்தவன்
07. கோகாத்தின் மூன்றாவது மகன்
12. முதலாவதாக திராட்சைத் தோட்டத்தை நாட்டியவன்
16. மொர்தெகாய் தனக்கு முன் எழுந்திராததைக் கண்டு உக்கிரம் நிறைந்தவன்

---

**மேலிருந்து கீழாக**

01. எல்க்கானா இந்த ஊரைச் சேர்ந்தவன்
03. ஆசகேலைக் கொன்றுபோட்டவன்
09. "எருசலேமில் வாசம் பண்ணுகிற தேவன்" எனக் கூறியவன்

---

**கீழிருந்து மேலாக**

10. ஆனானியின் வார்த்தையைக் கேட்டு அழுது துக்கித்தவன்
13. சுவரில் எழுதின கையுறுப்பைக் கண்டவன்
15. மீதியானியரை மோவாப் நாட்டிலே முறியடித்தவன்
17. எலிசாவின் அப்பா




போதகர் வே.மகாராஜா




தேவனுக்குப் பயப்படுகிற பயத்தைக் குறித்து வேதாகமம் முழுவதும் பார்க்க முடியும். தேவனுக்குப் பயப்படும் பயத்தை உதாரணப்படுத்தி சொல்வது என்றால், "நாங்கள் பாவம் செய்கிற சந்தர்ப்ப சூழ்நிலை வருகிற போது என்னுடைய கர்த்தர் அதைக் காண்கிறார் என்று நினைத்து செய்ய நினைத்ததை செய்யாமல் விடும்போது, அது தேவனுக்குரிய பயம் எங்களுக்குள் இருப்பது என்பதற்கான அடையாளம்" ஆகும். இன்னொருவிதத்தில் கூறினால், "நாம் எல்லோரும் பிறந்துவிட்டோம், இந்தப் பூமியிலே வாழ்கிறோம், எங்களுக்கு நியாயத்தீர்ப்பு என்ற ஒன்று வரும் என்பதை நினைத்து அதற்கு எங்களை ஆயத்தமாக்குவதற்காக தூய்மையான வாழ்வு வாழ்வது" தேவனுக்கு பயப்படுகிற பயத்தின் இன்னொரு பகுதி. "ஆண்டவராகிய இயேசு எனக்காக பாடுபட்டாரே, கர்த்தராகிய இயேசு

என்னுடைய பாவத்தை தம் சரீரத்தில் சுமந்து நான் பெற்றுக்கொள்ள வேண்டிய தண்டனையை அவர் பெற்றுக்கொண் டாரே, அவரை நான் ஒரு போதும் புண்படுத்தக் கூடாது என்கிற நினைவு" எங்களுக்குள் வரும் என்றால் அது தேவனுக்குப் பயப்படுகிற பயம்.

தேவனுக்குப் பயப்படும் பயம் என்பது எப்போதும் எங்களை நன்மைக்கு நேராகவே நடத்திக் கொண்டு போகும். தேவனுக்குப் பயப்படும் பயம் என்பது எங்களுக்கு நித்திய ஜீவனைத் தருவ தாகவே இருக்கும். ஆகவே தேவனுக்குப் பயப்படும் பயம் முழு வேதாகமத்திலும் உண்டு. வேதத்தைப் படிக்கிற ஒவ்வொரு வரும் அதைக் கண்டு கொள்ள முடியும். முடிவு நன்மையாகவே இருக்கும்.

அறிஞர்கள் பயத்தை இரண்டு விதமாக பிரித்துள்ளார்கள்.

**1. உய்வுப்பயம் - நன்மையானது**

**2. கற்பனைப் பயம் - தீமையானது**

**உய்வுப்பயம் என்பது மனி தனுக்கு இருக்கத்தான் வேண்டும். அது இருப்பது சாதாரணமானது.** *உதாரண மாக வீதியாலே செல்லும் போது வாகனத்தைக் கண்டால் கவனமாக ஒதுங்கிச் செல்வோம். எனக்குப் பயமே இல்லை என்று நடுவீதி யால் வரும் வாகனத்திற்கு நேராகச் செல்ல முடியாது. அப்படிச் செய்தால் நாம் அந்த வாகனத்தால் மோதப் பட வேண்டி இருக்கும். ஒரு வேளை மரணம் கூட ஏற்படலாம்.* இந்த உய்வுப்பயம் மனிதனுக்கு வேண்டும் அது நன்மையானது. **ஆனால் கற்பனைப் பயம் என்றால் அது மனிதனை விழுந்து போகப் பண்ணும், அவனை நிலை தடுமாறப் பண்ணும், தேவனுடைய வழியை விட்டு நீங்கப்பண்ணும். மாத்திரமல்ல கற்பனைப்பயம்வியாதியைக் கொண்டு வரும். இன்னும் எத்தனையோ விதமான பாதிப்புக்களை மனிதனுக்கு ஏற்படுத்தும்.**

வியாதி வருகிற போது ஒரு பயம் வருகிறது. வியாதி உள்ள நபராக இருப் பீர்கள் என்றால் **ஒரு போதும் கற்பனை பயம் உங்களைத் தொடுவதற்கு விட வேண்டாம்.** உங்களுக்கு வியாதி இருப்பது தெரியும் ஆனால் கிறிஸ்தவர்களாகிய எங்களுக்குத் தெரியும் **எங்களுடைய தேவன் அவர் சுகம்கொடுக்கிற கர்த்தர்.** நாம் கற்பனைப் பயத்திற்கு இடம் கொடுத்தால் அந்த வியாதி இரட்டிப்பாய் மாறும். இன்னும் வியாதி பெலனடையும். ஒரு வேளை அந்த வியாதி எங்களை தன்னு டைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடும்.

பவுலுக்கு ஒரு முள் கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் அவர் அந்த முள் தன்னுடைய வாழ்க்கையை மேற்கொள் வதற்கு இடம்கொடுக்கவில்லை. எத்த னையோ பிள்ளைகள் வியாதியோடு இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் உற் சாகமடைய வேண்டும், பவுலினுடைய முன்மாதிரியைப் பாருங்கள். **நான் மூன்று தடவைகள் ஆண்டவரே இந்த முள் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் என்று ஜெபம்பண்ணினேன். ஆனால் ஆண்டவர் சொன்னார், என் கிருபை உனக்குப் போதும், உன் பெலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும் என்று. 1கொரிந்தியர் 12:7-10** நீங்கள் வியாதியோடு இருக்க முடியும், ஆனால்

சொல்லுங்கள் ஆண்டவரே இந்தக் கற்பனைப் பயம் என்னை ஆட்கொள் வதற்கு விடாதேயும். என்னுடைய பெலவீனத்தில் உம்முடைய பெலன் பூரணமாய் விளங்கட்டும்.

சிலவேளைகளில் எலும்புக்கூடு கள் அல்லது மண்டை ஓட்டைக் கண்டால் பேய் என்று சொல்வோம். மனிதன் என்ற தோற்றத்தைக் கொடுப்பதே அந்த எலும்புக் கூடு தான். எலும்புக்கூடு பேய் என்றால் எங்கள் எல்லோருக்குள்ளும் ஒரு பேய் உண்டு. கற்பனை சிலவேளை எங்களுக்கு பயங்களை உண்டாக்கு கிறது. ஆனால் நீங்கள் நினைப்பதைப் போன்று அது பேய் அல்ல. **கற்பனைப் பயத்திற்கு இடம்கொடுத்ததாலே பார்க்க வேண்டிய சில மனிதர்களை மனிதர் களாக பார்க்க முடியாமல் இருக்கிறது: நாம் சேர வேண்டிய மனிதர்களோடு சேரமுடியாமல் இருக்கிறது.** ஏனென்றால் கற்பனைப் பயம். தயவு செய்து இந்தப் பயத்தை நாங்கள் வெளியே கொண்டு வரவேண்டும். எங்களுடைய வாழ்வுக்குள் இந்தப் பயம் இருக்குமென்றால் அது மிக அதிகமாக வேதனைக்கு முகம் கொடுக்க எங்களைத் தள்ளும்.

**நீதிமொழிகள் 24:22 சடிதியில் அவர்களுடைய ஆபத்து எழும்பும்; அவர் கள் இருவரின் சங்காரத்தையும் அறிந்த வன் யார்?** *ஒருவர் சவுதி அரேபி யாவுக்கு தொழில் நிமித்தம் செல்ல ஆயத்தப்பட்டார். அப்போது அவர் இந்த வார்த்தையை வாசிக்கும் போது "சடிதியில்" என்ற வார்த் தையில் உள்ள "டி" க்கு பதிலாக "வு" என்று உச்சரித்து "சவுதியில்" என வாசித்தார். அதனால் அங்கே செல்ல ஆயத்தப்பட்டவர் இப் போது நான் அங்கே செல்லமாட் டேன், வேதவார்த்தையே சொல்கி றது சவுதியில் ஆபத்து எழும்பும் என்று குழம்பிப்போனார்.* சிலவேளை வேதத்தை வைத்தே எங்களுடைய சரியான கவனிக்காமை, புரிந்து கொள்ளாமை கூட சில கற்பனைப் பயங்களை எங்களுக் குள் தோற்றுவித்துவிடும். சிலருக்கு வியாதி வந்தால் கூட நான் செத்துவிடு வேனோ என்ற பயம் எழும்பிவிடும். ஒரு *அம்மா 2014ஆம் ஆண்டு என்னி டம் சொன்னார், நான் 2015ஆம் ஆண்டு மரித்து விடுவேன் என்று. ஆனால் அவர் இன்றைக்கும் உயிரோடு தான் இருக்கிறார்.* சில பயங்கள் தேவன் எங்களுடைய வாழ் விற்குள் வைத்த திட்டங்களையெல்லாம் கொச்சைப்படுத்தி விடும், சில பயங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுக்காது. கற்பனைப் பயம் உங்களை ஆட்கொள் வதற்கு ஒரு போதும் இடங்கொடுக்கா தீர்கள்.

இந்தக் கற்பனைப் பயத்தால் சில குடும்பங்களில் உறவுநிலை கூட சரியில்லாமல் இருக்கிறது. சில கணவன் மனைவிக்கிடையில் கற்பனைப் பயத்தி னால் அவர்களுக்குள் ஐக்கியம் இல்லை. *மனைவி அழகாக தலை சீவி இருந்தால் கணவனுக்கு சந்தேகம். கற்பனைப் பயம் குடும்பங்களுக்குள் உறவுகளைப் பாதிக்கிறது. கணவன் தாமதமாக வீட்டிற்கு வந்தால் என்ன நடைபெற்றது, தொலை பேசி அழைப்பெடுத்து பார்த்தால் தொலைபேசி இயங்காத நிலை யில் இருக்கிறது என்ன நடைபெறு கிறது என்று சந்தேகப்படுவோம்.* தவறான கற்பனைகள் பலருடைய

குடும்ப வாழ்க்கைக்குள் சந்தோஷத்தை, சமாதானத்தைக் கெடுத்துவிட்டது. இன்னும் சில குடும்பங்கள் கூட இந்த பயத்தினால் பிரிந்தே போய்விட்டது. ஒரு சில குடும்பங்கள் இன்றைக்கோ நாளைக்கோ எங்களுடைய குடும்ப வாழ்வு உடைந்து போய்விடும் என்று சிந்திக்கிறீர்கள். **ஆனால் இன்றைக்கு உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம், உங்களுடைய கற்பனைப் பயத்தால் ஏற்படுகிற இந்த பெரிய வேதனையாகிய சூழ்நிலைகளிலிருந்து மனந்திரும்பி உங்களை சரி செய்து கொள்ளுங்கள்.**

இது ஒருவகையான மனப்பாதிப்பு. எனவே தயவு செய்து இன்றைக்கே தேவனிடம் அதை அறிக்கை செய்து விட்டுவிடுங்கள். உங்களுடைய குடும்பத்திற்குள் நிம்மதியே இல்லை, ஒவ்வொரு நாளும் கண்ணீர், உங்களுடைய குடும்பத்தில் பிசாசு இறங்கி கிரியை செய்யத் தொடங்கியிருக்கிறான். எப்படியென்றால் உங்களுக்குள் சந்தேகம், வஞ்சனையான சிந்தனை என்பவற்றை உங்கள் உள்ளத்திலே நாட்டியிருக்கிறான். தேவனிடம் அவற்றை அறிக்கை செய்யுங்கள். கர்த்தர் மறுபடி நீங்கள் இழந்து போன சமாதானத்தை உங்களுடைய குடும்பத்திற்குள் நாட்டுவார். பயம் தேவனை அறிந்த பிள்ளைகளுக்குள் வருவதற்குரிய காரணங்கள் சிலவற்றைக் குறித்து ஆராய்ந்து பார்க்கலாம்.

## 01. பாவம் பயத்தைக் கொண்டு வரும்

**ஆதியாகமம் 3:10 அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக் கொண்டேன் என்றான். ஆதாம் ஏன் பயந்து ஒளித்துக்கொண்டான் என்றால் அவன் பாவம் செய்தபடியால் ஒளித்துக் கொண்டான்.** தேவனோடு இருக்கிற எங்களுடைய உறவைக் கெடுக்கிற, தேவனோடு நடக்கமுடியாதபடிக்கு, தேவனோடு உள்ள ஐக்கியத்தை உடைக்கின்ற பயம் எப்படி வந்தது என்றால் பாவம் எந்த கணம் அவனுக்குள் வந்ததோ அந்தக் கணம் அவனுக்குள் பயமும் வந்தது. பாவம் செய்ய முதல் பயமற்ற மனநிலை எங்களுக்குள் இருந்தது ஆனால் பாவத்தை செய்த பிறபாடு ஒரு பயம் எங்களை பற்றிக் கொள்கிறது. எங்களுடைய உள்ளத்தில் இருக்கிற பாவம் அந்தப் பயத்திற்குரியது. நீங்கள் ஏன் அடிக்கடி பயப்படுகிறீர்கள்? தேவனுடைய கட்டளையை மீறி பாவம் செய்ததால் ஆதாமுக்குள் ஒரு பயம் வந்தது. **நேர்மையாக பரிசுத்தமாக ஆவியினால் நிறைந்தவர்களைக் காணும் போது பயம் ஒன்று வருகிறதா? அப்படியென்றால் செய்யக் கூடாத ஒன்றைச் செய்திருக்கிறோம்.**

*ஒரு சகோதரி திடீரென சொன்னார், எனக்கு ஒரே பயமாக இருக்கிறது என்று. அவருடைய பயத்திற்கான காரணம் என்னவென்று விசாரிக்கப்போனால் தான் செய்த தவறு எதையும் அவள் சொல்லவில்லை. மாறாக பயமாய் இருக்கிறது போதகரே ஏன் பயமாக இருக்கிறது என்று கேட்டுக்கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு ஏன் இவ்வளவு பயம் என்று ஆராய்ந்து பார்க்கிற போது அவள் தன்னுடைய கணவனுக்கு துரோகம் செய்திருக்கிறாள். இது உண்மையான*

*உதாரணம்.* அந்த பாவம் அவளுக்குள் இருந்தது, அதை அவள் நினைக்கும் போதெல்லாம் அவளை அறியாமலேயே அவளுக்குள் ஒரு பயம் அவளை பற்றிப்பிடித்துக் கொள்ளும். *சின்ன பிள்ளைகளை வைத்திருப்பவர்களுக்கு தெரியும். நன்றாக இருக்கிற பிள்ளைகள் சிலவேளை பீதியாக இருப்பார்கள். கதைத்தாலும் எந்த பதிலும் சொல்லமாட்டார்கள். கடைசியாக ஏன் இவர்கள் இவ்வாறு இருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் செய்யக்கூடாத ஏதோ ஒரு குறும்புத்தனம் செய்திருப்பார்கள்.*

பாவம் ஒரு மனிதனை பயமுள்ளவனாக மாற்றும். தேவனோடுள்ள உறவை விட்டு பிரிக்கிற அந்த பயத்தைக் குறித்து சொல்கிறேன். **பாவத்தால் வந்த பயத்தை ஆதாம் சரி செய்வதற்கு முயற்சிக்காததால் அவன் ஏதேனில் இருந்து துரத்தப்பட்டான். ஆதாம் அந்த பாவத்திற்குரிய காரணம் என்னவென்பதை தன்னை உருவாக்கிய தேவனிடத்தில் அறிக்கை செய்யாததினால் அவன் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டான்.** ஆதாமும் ஏவாளும் தேவனிடத்தில், நாங்கள் பாவம் செய்தோம், எங்களுக்கு மன்னியும் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. அதனால் அவனுடைய வாழ்வில் அதிக வேதனை. தேவனுடைய சமூகத்தைவிட்டு, தேவனுடைய உறவை விட்டு அவன் துரத்தப்பட்டான். **நாங்கள் ஆண்டவருடைய உறவைவிட்டு துரத்தப்படுவதற்கு முன்பு, தேவன் தந்த நன்மைகளை, ஆசீர்வாதங்களை இழப்பதற்கு முன்பாக நீங்கள் செய்த பாவத்தை தேவனிடம் அறிக்கை செய்ய வேண்டும். யாருக்கு அறிக்கை செய்ய வேண்டுமோ அவர்களுக்கு முன்பாகவும் அந்த அறிக்கையை செய்ய வேண்டும்.** தயவு செய்து நீங்கள் அறிக்கை செய்யாமல் இருந்தால் உங்களுடைய வாழ்வில் பாவத்தினால் வந்த பயம் உங்களைத் தொடர்ந்து வரும். அதனால் உங்களுக்கு மாத்திரமல்ல, பலருக்கும் வேதனையும், துன்பமும், குறைவுகளும், நிந்தனைகளும் ஏற்படுகிற வாய்புகள் உருவாகும்.

## 02. தேவ சித்தத்தைப் புறந்தள்ளி எம் சித்தத்தை நிறைவேற்ற முனையும் போது பயம் வரும்

1சாமுவேல் 15, 16, 17ஆம் அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள். சவுல் ராஜா தேவன் கூறிய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. **சவுல் கீழ்ப்படியாமல் போனதின் நிமித்தம் ஆண்டவர் தாவீதுக்கு விசேஷித்த அபிஷேகத்தைக் கொடுத்தார்.** எங்களுக்கு தேவனுடைய பிள்ளைகள் என்று பெயர். நாங்கள் அந்த பெயருக்கு ஏற்ப வாழ வேண்டும். கிறிஸ்தவர்கள் என்றால் தேவன் கூறியதைச் செய்ய வேண்டும். சவுல் தேவன் கூறியதைச் செய்யாததால் தேவன் தாவீதை இஸ்ரவேல் மேல் ராஜாவாக்கும்படி சித்தம் கொண்டார். நாற்பது நாட்கள் இரவும் பகலும் இஸ்ரவேல் சேனைகளைப் பார்த்து நிந்தித்த கோலியாத்தோடு நேருக்கு நேராக மோதுகிற பரீட்சை ஒன்று தாவீதுக்கு வந்தது. இஸ்ரவேலின் தேவனை நிந்திக்கிற இவனோடு நான் யுத்தத்திற்கு போகிறேன் என்று தாவீது சொன்ன போது சவுல், இல்லை நீ சின்ன பிள்ளை

என்று சொன்னான். ஆனால் தாவீது நான் ஒரு நாள் கரடியையும் சிங்கத் தையும் கொன்றேன். ஆகவே இந்தக் கோலியாத்தையும் கொல்வேன் என்று சொல்லி தாவீது யுத்தத்திற்கு போகிற போது சவுல் அவனை அழைத்து தன்னு டைய தலைச்சீராவையும் ஆடைகளை யும் அவனுக்கு அணிவித்துவிட்டான். ஆனால் அவற்றை அணிந்து கொண்டு நடந்து பார்த்த தாவீதுக்கு அவை பழக்கப்படாததால் கஷ்டமாக இருந்தது. ஆகவே அவற்றைக் கழற்றிவிட்டு சென்றான். அவன் தான் ஆடு மேய்க்கிற போது அதைக் கொல்ல வந்த மற்றைய மிருகங்களை கொன்ற அனுபவங்கள், ஆடு மேய்க்கிற போது அவன் பாடல் களைப் பாடுவான், அப்போது தேவ பிரசன்னத்தை உணருவான், ஆடுகளை மேய்க்கிற போதே அவன் கர்த்தரோடு நல்ல உறவில் வளர்ந்தான்.

**உங்களுடைய வாழ்வில் கர்த்தர் எதை அனுமதித்தாலும் அந்த அனுமதியை தேவனுடைய உறவை முறிப்பதற்கு பயன்படுத்த வேண்டாம். தேவனுடைய உறவில் வளருவதற்கு அதைப் பயன் படுத்துங்கள்.** ஒருவேளை மற்றவர்கள் அதைப்பார்த்து ஏளனம் கூட செய்யலாம். ஆனால் தாவீது ஏளனம் உள்ள அந்த தொழிலோடும் தேவாதி தேவன் மேல் உள்ள உறவில் வளர்ந்தான். அந்த அனுபவத்தில் ஐந்து கூளாம் கற்களை எடுத்தான், தன்னுடைய கவணை எடுத்தான். வேதம் சொல்கிறது அவன் கற்களை மேய்ப்பனுக்குரிய அடைப்பத்திலே போட் டான். கோலியாத்திற்கு கிட்ட தாவீது சென்ற போது கோலியாத் உறுமுகிறான். ஒரு கல்லைக் கவணில் வைத்து சுழற்றி ஒரு அடி அது கோலியாத்தின் நெற்றியில் படுகிறது. அப்போது கோலியாத் நிலை குலைந்து விழுந்த போது அவன் மேல் ஏறி நின்று அவன் பட்டயத்தை எடுத்து அவன் தலையை வெட்டிப்போடுகிறான். அவனுடைய தலையை எடுத்துக் கொண்டு எருசலேமுக்கு போகிறான். அப்போது சவுல் அப்னேரிடம் கேட்கிறான், இந்த வாலிபன் யார் என்று. ஆனால் முன்பு சவுல் தான் தனது உடைகளையெல்லாம் தாவீதுக்கு அணிவித்து அனுப்பினான். நான் தேவ சமூகத்தில் இருந்த போது உணர்ந்து கொண்ட காரியம், **தன்னால் செய்ய முடியாததை இவன் செய்து விட்டான் என்பதை சவுலினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.** அதனால் தான் அவன் அப்னேரிடம் இவன் யார் என்று கேட்கிறான்.

முன்பு ஈசாயிடம் ஆள் அனுப்பி அவனை இங்கு அனுப்பும்படி சொன்னதே சவுல் தான். **1சாமுவேல் 16:19 அப் பொழுது சவுல்: ஈசாயினிடத்தில் ஆட்களை அனுப்பி, ஆட்டுமந்தையில் இருக்கிற உன் குமாரனாகிய தாவீதை என்னிடத்தில் அனுப்பு என்று சொல்லச் சொன்னான்.** ஆனால் இப்போது அப்னேரிடம் தாவீதைக் குறித்து தெரியாதது போன்று இவன் தகப்பன் பெயர் என்னவென்று கேட்கி றான். சவுல் கொன்றது 1000 தாவீது கொன்றது பதினாயிரம் என்று ஸ்திரீகள் பாடின போது **1சாமுவேல் 18:8-9 (8.) அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயி ருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும்ராஜாங்க மாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கி றது என்று சொல்லி, 9. அந்நாள்முதற் கொண்டு சவுல் தாவீதைக் காய்மகார மாய்ப் பார்த்தான்.** அவன் மனதுக்குள்

நினைத்ததை ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார். **என் பதவி பறிபோய் விடுமே என்ற பயம் வந்துவிட்டது.** அவனுடைய கற்பனைப்பயம்; என்னுடைய இடத்தை தாவீது பிடிக்கப்போகிறான் என்பதாக மாறிவிட்டது. **தாவீது அவ்வாறு நினைத்ததே கிடையாது. அவனுடைய இருதயத்தில் அவ்வாறு எண்ணம் தோற்றம் பெற்றதே இல்லை. தேவன் தாவீதை நடத்திக் கொண்டு செல்கிறார். ஆனால் அவனுக்குள் அவ்வாறான எண்ணம் ஏற்படவில்லை.**

**பதவி பறிபோய்விடுமே என்ற பயம் நீதிமானை பகைக்கப்பண்ணி யது. இஸ்ரவேலுக்கு வர இருந்த நிந்தனையை போக்கப்பண்ணிய மனிதனை துரத்தச் செய்தது. சரியான மனிதன் மீது தவறான கூற்று சொல்லப் பட வைத்தது.** நடைபெற்றதை அல்ல நடைபெறாததை, உண்மையாக நேசித்த தாவீதை சவுல் வெறுப்பதற்கு காரணம் தேவ சித்தத்தை புறந்தள்ளி தன் சித்தத்தை நிறைவேற்ற நினைத்ததால் வந்த பயம். எத்தனை நல்லவர்களை, நீதிமான்களை, பரிசுத்தவான்களை ஏளனமாய்பேசி, ஏளனமாய் மற்றவர் களுக்குள் தூற்றியிருக்கிறோம். ஒரு மனிதனின் வளர்ச்சி குறித்து உங்களுக் குள் வருகிற பயத்தை ஒரு போதும் வளரவிடாதீர்கள். ஆண்டவரே நான் இப்படி யோசிக்கிறேன், இது சரியா என்று ஆண்டவரிடம் கேளுங்கள். ஆண்டவரி டம் கேட்பதற்கு முன் சிலரை அழைத்து இவரைக் குறித்து கவனமாக இருங்கள் என்று சொல்லக்கூடாது. ஒருவர் வந்து *என்னிடம் சொன்னார், அந்த செய்தியினால் என்னுடைய உள்ளம் உடைந்தது. யாரோ சொல்லியிருக்கிறார்கள் இவரைக் குறித்து கவனமாயிருங்கள் என்று. அப்போது நான் என்ன செய்தேன்? என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது. தப்பு செய்தேனா? களவு செய்தேனா? தந்திரம் செய்தேனா? அல்லது பாவத்திற்கு ஒத்துப்போனேனா? என்று கேள்விகள் எழுந்தது. ஆனாலும் ஆண்டவரே நீர் பார்த்துக் கொள்ளும் என்று சொன்னேன்.*

தயவு செய்து யோசித்துப் பாருங் கள், எந்த மனிதனை பகைத்திருக்கிறீர் கள்? நீங்கள் பகைத்தத்திற்குரிய காரியம் உண்மையில் அவர் செய்தாரா? நீங்கள் எந்த ஸ்திரீயைப் பகைத்திருக் கிறீர்கள்? நீங்கள் பகைப்பதற்குரிய நோக்கம் சரியானதா? **தயவு செய்து தேவனுடைய சித்தத்தின்படி தெரிவு செய்யப்பட்டவர்களை, தேவனுடைய ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர் களை, தேவனுடைய வழிநடத்தலுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களை, தேவனு டைய சித்தத்தின்படி அழைப்பை பெற்ற வர்களை ஒரு போதும் வெட்டிவிடா தீர்கள்.** ஆண்டவர் ஒவ்வொருவரு டைய இருதயத்திலும் இந்த பாரத்தை வைத்தருள் வாராக. **உண்மையுள்ளவர்களை நன்றாக நேசியுங்கள். அதனால் உங்களுக்கு நன்மை உண்டாகும். பாவத்தோடு ஒத்துப்போகாதவனை நேசியுங்கள். ஒரு நாள் தேவனுடைய சாட்சி உங்களுக்கு கிடைக்கும்.** தேவனு டைய மனிதர்களை மனத்தினாலேயோ அல்லது கரத்தினாலேயோ தாக்க வேண்டாம்.

சவுலுக்குப் பயம் வருவதற்குரிய முக்கியமான காரியம் என்னவென்றால்,

அவனுடைய பதவி. தேவனுடைய சித்தத்திற்கு விட்டுக்கொடுக்காத சூழ்நிலை வந்து தேவனுடைய இருதயத்தை அவன் உடைத்துப்போட்டான்.

## 03. ஒருவித ஆவியின் தாக்கத்திற்கு விட்டுக்கொடுத்தால் பயம் உண்டாகும்.

**11தீமோத்தேயு 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.** தேவனிடமிருந்து பயமுள்ள ஆவி கிடைக்காது. நாம் பயப்படுகிறோம் என்றால் அதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், தேவ ஆவியில்லாத இன்னொரு ஆவி எங்களைப் பிடித்திருக்கிறது. சிலரிடம் பேசுகிற போது அந்த அனுபவம் கிடைத்திருக்கும். அவர்களுக்கு பாவம் செய்திருக்கிறோம் என்ற அறிவு கிடையாது. ஆனால் என்னை அறியாத பயம் ஒன்று என்னை ஆட்கொண்டிருக்கிறது, என்னை அது அலைக்கழிக்கிறது, ஏன் இப்படி ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது என்று சொல்வார்கள். *எனக்கு தெரிந்த சகோதரன் ஒருவன் நன்றாக இருந்தவர், திடீரென்று தனக்கு பயமாக இருக்கிறது என்று சொன்னார். அவர் தன்னுடைய வேலையில் பலமடங்கு வேகம் காண்பிப்பார். ஆவியின் தாக்கம் இருப்பதால் வேலைகளை அவ்வாறு செய்வார். எனக்கு பயமாக இருக்கிறது என்று சொல்வார். பிற்பாடு பார்த்தால் அவருக்கு ஜெபித்த போது அசுத்த ஆவி அவரைவிட்டு அகன்று போனது.*

நாங்கள் நன்றாக வேலைகளைச் செய்யலாம், நல்ல உத்தியோகத்தில் இருக்க முடியும், நல்ல பொறுப்புக்களை வகிக்கலாம் ஆனால் எங்களுடைய வாழ்க்கையில் அசுத்த ஆவியின் தாக்கம் இருக்குமாயிருந்தால் எங்களுடைய செயற்பாடுகள், தீர்மானங்கள், முடிவுகள் கூட அந்த பயத்தின் அடிப்படையில் தான் நடந்து கொண்டிருக்குமென்றால் அது தேவனுக்குப் பிரியமில்லாத ஒரு ஆவியாகத்தான் இருக்கும். பயத்தின் அடிப்படையில் எத்தனை தீர்மானங்களை எடுத்திருப்பீர்கள்? எத்தனை காரியங்களை செயற்படுத்தியிருப்பீர்கள், இதற்குள் தேவனுக்கு பயப்படுகிற பயத்தோடு எடுக்கிற முடிவுகளும் உண்டு. ஆனால் தேவ ஆவி இல்லாத பட்சத்தில் ஆவி பிடித்திருந்தால் காரியங்களை வெளிப்படுத்துவோம்.

**உங்களை அறியாமல் பயம் வருகிறதா? சிந்தித்துப்பாருங்கள். எந்த தாக்கத்திற்கு உங்களைவிட்டுக் கொடுத்தீர்கள்?** *ஒரு சகோதரன் ஒரு இடத்திற்கு சென்றிருந்தார். அவர்கள் கொடுத்த பாற் சோற்றையும் சாப்பிட்டிருக்கிறார். அதை சாப்பிட்ட பிற்பாடு சில நாட்களின் பின் என்னை அறியாமலே எனக்குள் ஒரு பயம் காணப்படுகிறது என்று சொன்னார்.* தயவு செய்து உங்களுடைய பிள்ளைகளை கவனமாக வளர்த்துக் கொள்ளுங்கள். எங்கே சென்று, எதை வாங்கி சாப்பிடுகிறார்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். சிலவேளை வெறுங்கையாய் சென்று அசுத்த ஆவி பிடிக்கப்பட்டவர்களாய் திரும்பி வருவார்கள், சில பாரம்பரிய வாழ்க்கையை முறையை

விட்டுவிடாத கட்டு எங்களுக்குள் இருக்கிறது. அந்த கட்டும் ஒருவிதத்தில் ஆவியின் தாக்கம் தான். எத்தனையோ விதமான கட்டுக்களில் இருக்கிறோமோ இன்றைக்கு அவற்றில் இருந்து வெளியே வரவேண்டும்.

## பயப்படுவதால் வரும் பலன்

**வெளிப்படுத்தல் 21:8 பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.** இப்படிப்பட்ட பயத்தை உடையவர்களுக்களுக்கு நித்திய நரக வாழ்க்கை பலனாக கிடைக்கும்.

எனவே தேவனிடம் அறிக்கை செய்து ஆண்டவரே பயத்தின் ஆவிகளை என்னைவிட்டு அகற்றிவிடும் என்னை உமக்கு அர்ப்பணிக்கிறேன் என்று அவரிடத்தில் உங்களை ஒப்புக் கொடுங்கள். தேவனுடைய வருகை சமீபமாய் இருக்கிறது! ஆயத்தமாவோம்!! ஆயத்தப் படுத்துவோம்!!!

**"தேவன் தாமே
உங்களை நிறைவாக
ஆசீர்வதிப்பாராக"**





# பொறாமையின் விளைவு

## வேதப்பகுதி: மாற்கு 6:1—6

சோபிகாவிடம் இப்போது சில மாணவிகள் கோபமாகப் பேசுகிறார்கள். சிலர் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொள்கின்றனர். சோபிகாவைக் குறித்து எதையாவது பொய்யாகச் சொல்லுகின்றனர். ஏதாவது சிறு குறை என்றாலும் ஆசிரியரிடம் போய் சொல்லுகிறார்கள். ஏன் இவர்கள் என்னை காரணம் எதுவும் இல்லாமல் வெறுக்கின்றார்கள்? என்று அவள் யோசித்துப் பார்த்தாள்.



சோபிகாவுக்கு உண்மை தெரிந்தது. அவர்கள் அவள் மேல் பொறாமை கொண்டிருக்கின்றனர். ஏனென்றால் அவள் நன்றாகப் படிக்கின்றவள் என்றும் நன்றாக டென்னிஸ் விளையாடுகிறவள் என்றும், நல்ல ஒழுங்குள்ள மாணவி என்றும் தலைமை ஆசிரியர் பாராட்டியுள்ளார்.

ஆம் நாம் நன்றாகச் செயற்பட்டால் சிலர் பொறாமை அடைந்து நம்மை வெறுப்பார்கள். அதற்காக நாம் கலைப்படக்கூடாது. இயேசு நல்லவராயிருந்தார். நல்ல பல செயல்கள் செய்தார். அதைப் பார்த்து பரிசேயர்கள் பொறாமை கொண்டனர். அவரை வெறுத்தனர். ஆனால் இயேசு கவலைப்படவில்லை.

**சிந்தனைக்கு:—** பொறாமையினால் பிறர் நம்மை வெறுக்கலாம். ஆனாலும் நாம் கவலைப்படாமல் நல்லதைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — ஜுன் 05

# குறுக்கெழுத்துப் போட்டி - 92, வினா விடை - 94
## சரியான விடை எழுதியவர்கள்

**நாவற்குழி**
01. ஆ.றெஜினா *
02. எஸ்.லக்சாயினி
03. அ.மேரி
04. அ.ஜெரோம்

**வேரவில்**
05. அ.அபிசாயினி

**பள்ளிக்குடா**
06. க.கிறேஸ் கெற்சியாள்

**பாண்டவெட்டை**
07. அ.துவாரகன்
08. எம்.ஜெசிந்தா
09. சி.சிவனேஸ்வரன்
10. சி.சுமித்திரா
11. ம.நிம்சிகா
12. ம.சிவகௌரி

**புங்குடுதீவு**
13. ஜெ.ஜரன்யா

**மானிப்பாய்**
14. ஜெ.ஜெயந்தி

**திருநெல்வேலி**
15. என்.செல்வன் +



* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

# வினா விடை - 95

01. யாருடைய திராட்சைத் தோட்டம் முள்ளுக்காடாயிருந்தது?

02. கோடரி ஒன்றை தண்ணீரில் மிதக்கப்பண்ணினது யார்?

03. கழுதையின் மேல் ஏறி பிரயாணம் பண்ணின ஸ்திரீகள் யார்?

04. தன் மாமியாரை வேதனைப்படுத்தின மருமக்கள் யார்? யார்?

05. தன் மருமகளோடும் மகனோடும் மறுதேசம் போன தகப்பன் யார்?

06. "உங்கள் தொழில் என்ன" என்றது யார்?

07. அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின் மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணிக் கொண்டிருப்பவர்கள் யார்?

08. பூமியின் மீதெங்கும் புறப்பட்டுப் போகிற சாபத்தைக் கண்டது யார்?

09. பறக்கிற ஒரு புஸ்தகச் சுருளைக் கண்டவர் யார்?

10. கதவு கீல் முளையில் ஆடுகிறது போல் படுக்கையில் ஆடிக்கொண்டிருப்பவன் யார்?

# படித்ததில் பிடித்தது

**மனிதனே!**

**ஆடு மாடு மேய்த்த தாவீது**
என்னை அரசனாக்கும் என்று மன்றாடியது இல்லை...
**அடிமையாய் சென்ற யோசேப்பு**
என்னை அதிபதியாக்கும் என்று வேண்டியதும் இல்லை...
**சிங்ககெபியிலே வீசப்பட்ட தானியேல்**
என்னை விடுவியும் என்று கதறியதும் இல்லை...
**உண்மை கிறிஸ்தவனுக்கு எல்லாம் தேடி வரும்!**





நான் நூறாவது முறை
வேதத்தை வாசித்த போது,
முதன்முறை வாசித்ததை
விட அதை மிகவும்
அழகுள்ளதாகக் கண்டேன்.

C.H.ஸ்பர்ஜன்



கிறிஸ்துவுக்குள் ஒருவன்
வளர்ந்திருப்பதின்
அடையாளம்
பரிசுத்தமே தவிர
உலக ஆசீர்வாதங்கள்
அல்ல



நல்லவனாய் இரு
ஆனால் அதை நிரூபிக்க
முயச்சி செய்யாதே!
அதைவிட முட்டாள்தனமான
விஷயம் ஏதுமில்லை

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது
பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி
வைத்தால் சந்தாதாரர்களாகச்
சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH**
என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை **(Sri Lanka)** | **245.00** |
| இந்தியா **(India)** | **490.00** |
| கனடா, அமெரிக்கா **(Canada & USA)** | **1015.00** |
| சிங்கப்பூர், மலேசியா **(Singapore & Malaysia)** | **525.00** |
| மத்திய கிழக்கு நாடுகள் **(Middle East Countries)** | **510.00** |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா **(Germany, England, Italy & Australia)** | **850.00** |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன்
சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..............................................................................

முகவரி:............................................................................

.......................................................................................

.......................................................................................

1. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.
2. அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.
3. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.
4. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.
5. என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.
6. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

*சங்கீதம் 23:1-6*



To:

*Zion Church Office,*
*No. 347, Navalar Road,*
*Jaffna, Srilanka.*

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351